THE WORLD NEEDS THE WORD
IBT
அக்டோபர் 2026
மலர் 25, இதழ் 1

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# வேதாகமும் தேவனின் மருத்துவமும்



# வேதாகமும் தேவனின் மருத்துவமும்

**மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்... (நீதி 17 : 22).**

வேதாகமத்திலே நம் ஆண்டவர் செய்த எத்தனையோ அற்புதங்கள், அதிசயங்களைப் பற்றி நாம் படித்திருக்கிறோம். ஆனால், அதே சமயம் எந்தவிதமான நோய்க்கு என்ன மருந்து உட்கொள்ளலாம் என்றும், அநேக வியாதிகள் விரைவில் குணமாவதற்கு ஏற்ற மருந்துகளைப் பற்றியும் வேதாகமத்தில் தேவன் சொல்ல தீர்க்கன்களால் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் இந்த உலகத்தைச் சிருஷ்டித்தபோது, (ஆதியாகமம் 1 : 29) பூமியின் மேல் சகலவித பூண்டுகள், கனிமரங்கள், சகலவித விருட்சங்களையும் படைத்தார். இவைகளுக்குள்தான் மருத்துவ ரீதியான அநேக மருந்துகளையும் வைத்தார். இவை எல்லாமே மனிதனுக்கு உபயோகமாகும் என்று தேவன் அறிந்திருந்தார். இயற்கையாகவே எந்த ஒரு கலப்பும் இல்லாமல் சுத்தமாகவும், நேர்த்தியாகவும், ருசிமிக்கதாயும், உடம்பில் உள்ள அவயவங்களின் குறைபாடுகளையெல்லாம் சரி செய்யும் அருமருந்தாக வைத்திருக்கிறார்.

திராட்சரசம், தூதாயீம்கனி, அத்திப்பழம், தேன், ஒலிவ எண்ணெய், பிசின் தைலம், கேதுரு மரம், இன்னும் எத்தனையோ பொருட்கள் மனிதனின் தேவைக்காக தேவனால் உண்டாக்கப்பட்டன. தமிழில் ஒரு பழமொழி ஒன்று உண்டு. **நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்** என்பது. ஞானி தம்முடைய புத்தகத்திலே **மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்** என்று எழுதுகிறார்.

**<u>ஔஷதம் என்றால் என்ன?</u>**

மிகுந்த துக்கம், கோபம், கவலை, வெறுப்பு, பொறாமை போன்றவை மனமடிவை மட்டுமின்றி, உடலுக்கும் ஊறுவிளைவிக்கின்றன. எப்போதும் மன மகிழ்ச்சியாய் இருப்பது ஆரோக்கியமான வாழ்வைத் தரும். ரசிக்கக் கூடிய நல்ல நகைச்சுவை சிறப்பானது. வேதத்தின்படி சரியானது. ஔஷதம் என்றால் **சிறப்பான / அருமையான மருந்து** என்று பொருள்படும்.

**மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத் தரும்... (நீதி 15:13).**
**... மனரம்மியமோ நித்திய விருந்து (நீதி. 15 : 15).**

**<u>மனரம்மியம் என்றால் என்ன?</u>**

மனரம்மியத்தைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப். 4 : 11,12-களில் எப்படி ரம்மியமாக எழுதுகிறார் பாருங்கள்!

நான் எந்த நிலையிலிருந்தாலும் மனரம்மியமாய் இருக்கக் கற்றுக் கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும். திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக்கவும் போதிக்கப்பட்டேன்.

தனக்கு இருப்பது போதுமென்கிற திருப்தியுள்ள மனநிலை மனரம்மியமாக இருப்பதற்கு தான் கற்றுக் கொண்டதாக பவுல் எழுதுகிறார். நாமும் இதைக் கற்றுக் கொண்டால் எப்பொழுதும் மனமகிழ்ச்சியாய் இருக்கலாம். இப்படி நாம் வாழ்ந்தால் **நம் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி குறைவையெல்லாம்......** நிறைவாக்குவார் (பிலி. 4 : 19).

தேவனால் இலவசமாய் கொடுக்கப்பட்ட இயற்கை மருந்துகளுக்கு நாம் தேவனுக்கு காசு,பணம் எதுவும் கொடுப்பது இல்லை. அவைகளைத் தகுந்த சமயத்தில் உபயோகித்தால் அதுவே போதும். வேதாகமத்திலிருந்து சில மருந்து பொருட்களைப் பற்றி அறியலாம்.

**<u>1. தூதாயீம் கனி :</u>**

கோதுமை அறுப்பு நாட்களிலே ரூபன் வயல்வெளியிலே போய் தூதாயீம் கனிகளைக் கண்டெடுத்து, தன் தாயாகிய லேயாளிடத்தில் கொடுத்தான். அப்போது ராகேல் - லேயாளை நோக்கி.... தூதாயீம் கனிகளில் எனக்குக் கொஞ்சம் தா என்றாள். (ஆதி. 30 : 14).

லேயாளும், ராகேலும் உடன் பிறந்த சகோதரிகள். லேயாளுக்கு நான்கு ஆண் பிள்ளைகள் (ரூபன், சிமியோன், லேவி, யூதா) பிறந்த பின்பு, ராகேல் தனக்கு மட்டும் குழந்தை

பாக்கியம் இல்லையே என்று கலங்குகிறாள். யாக்கோபு-ராகேலிடம் என்ன கூறினார்? தேவனல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார், என்றார். ராகேல் என்ன நினைத்தாள் என்றால் யாக்கோபு சொல்வதுபோல் தன்னுடைய கர்ப்பமானது அடைபட்டிருப்பதால் பக்கத்தில் உள்ளவர்கள் சொல்லைக் கேட்டு, இந்த தூதாயீம் கனிகளைச் சாப்பிட்டால் குழந்தை உண்டாகும் என்ற கட்டுக்கதையை நம்பி சாப்பிட்டாள். அந்தக் கனியைச் சாப்பிடாத லேயாள் ஐந்தாவது குழந்தையை கர்ப்பந்தரித்தாள் (இசக்கார்). கனியைச் சாப்பிட்ட ராகேலுக்கு குழந்தை உண்டாகவில்லை. இறுதியில் ராகேலின் ஜெபத்திற்கு தேவன் செவி சாய்த்தார். அருமையான யோசேப்பு மற்றும் பென்யமீன் என்ற இரண்டு ஆண்குழந்தைகளுக்கு தாயானாள்.

**தூதாயீம் பழம் வாசனை வீசும்; நமது வாசல்களண்டையிலே புதியவைகளும், பழையவைகளுமான சகலவித அருமையான கனிகளுமுண்டு; என் நேசரே! அவைகளை உமக்கு வைத்திருக்கிறேன் (உன்னத. 7 : 13).**

தூதாயீம் பழம் நறுமணங்களை வெளியே வீசும் வல்லமையுடையது. புதியவை மற்றும் பழையவை என்று சொல்லும் சொற்கள் எவையென்றால் மத். 13 : 52-வது வசனத்திலே **பரலோக ராஜ்யத்துக்குக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து பழையவைகளையும், புதியவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டு எஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்.**

நல்ல போதகன் யார் என்பதை இந்த வசனம் குறிப்பிடுகிறது. பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாட்டிலுள்ள உண்மைகளைச் சரியாக போதிக்கிறவர்களை இந்த வசனம் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. உலகம் சொல்லும் வார்த்தைகளை நம்பாமல், மதிப்புக் கொடாமல், விசுவாசியாமல் கர்த்தருடைய திட்டம், வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுப்போமானால், நம்முடைய வாழ்க்கைச் சீர்படுத்தப்படும். அருமையான கனிகளான அநேக ஆசீர்வாதங்களோடு நமது வாசலண்டையிலே நம் ஆண்டவர் வந்து நின்று, கதவைத் தட்டுவார். என் நேசரே! உள்ளே வாரும் ராயரே என்று அழைப்போமாக!

## 2. அத்திப்பழம் :

அத்திப்பழத்து அடையைக் கொண்டு வந்து பிளவையின் மேல் பற்றுப் போட்ட போது எசேக்கியா ராஜா பிழைத்தான் (2 இரா. 20 : 7).

கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் கர்த்தரை சார்ந்திருக்கும் வாழ்க்கை எவ்வளவு பேறுபெற்றவை. எசேக்கியா ஆவியானவரால் சாட்சி பெற்றவர். மனிதனாகப் பிறந்த எல்லோருக்குமே உடல் சுகவீனம் (நோய்) வருவது இயல்பு. அதேபோல தான் எசேக்கியா ராஜாவும் ஒரு சமயம் நோய் வாய்ப்பட்டார்.

எசேக்கியாவுக்கு வந்த நோய் ஒரு பிளவை. அது ஒரு ஆழமான புண். அது புரையோடி, மரணத்தையே சந்திக்கும் அளவுக்குக் கொடுமையாக இருந்தது. ஆகவே, ஏசாயா தீர்க்கன் எசேக்கியாவைப் போய் பார்த்து நீ மரிக்கப் போகிறீர். ஆகவே, வீட்டுக்காரியத்தை ஒழுங்குப்படுத்தும் என்று கூறினார். இதைக் கேட்டதும் எசேக்கியா மிகவும் வருத்தப்பட்டு, தன் முகத்தைச் சுவர் பக்கமாகத் திருப்பி, கர்த்தரை நோக்கி இஸ்ரவேல் ஜனங்களுக்குத் தான் செய்த சகல மேன்மையான காரியங்களைக் குறித்து விண்ணப்பம் செய்தான். எசேக்கியா சொல்ல வேண்டும் என்ற அவசியம் கிடையாது. அது தேவனுக்குத் தெரியும். இவைகளைச் சொன்ன போது, எசேக்கியா மிகவும் அழுதான். ஒரு தேசத்தின் ராஜா மரணத்தைக் குறித்து கலங்கி ஏசாயா தீர்க்கனிடம் முறையிடாமல் கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணினார்.

தேவன் எசேக்கியாவின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு பதினைந்து வருடங்களைக் (15) கூட்டித் தந்தார். அப்போது ஏசாயா அத்திப்பழத்து அடையைக் கொண்டு வரச்சொல்லி தீர்க்கன் தன்னுடைய கையினாலே பற்றுப் போட்டபோது, எசேக்கியா பிழைத்தான். அதன்பின், அநேக வருடங்கள் அரசனாக இருந்தார். நாள்பட்டப் புண்ணாக இருந்தாலும் அதைக் குணப்படுத்தக் கூடிய வல்லமை அத்திப் பழத்துக்கு உண்டு. நடக்க

முடியாமல் படுத்திருந்த எசேக்கியா, மூன்றே நாளில் குணமாகி தேவனுடைய ஆலயத்திற்குப் போனான்.

அத்திப்பழம் சாப்பிடுவதற்கும் சுவையாக இருக்கும். ஆறாத புண்ணையும் ஆற்றக் கூடிய மருத்துவ குணங்களை உள்ளடக்கியுள்ள ஒரு பழம். அதன் மரப்பட்டை கூட மருத்துவ குணம் கொண்டது.

**3. தேன் (Honey) :**

**யோனத்தான்... தன் கையிலிருந்த கோலை நீட்டி, அதின் நுனியினாலே தேன்கூட்டைக் குத்தி, அதை எடுத்து தன் வாயிலே போட்டுக்கொண்டான். அதினால் அவன் கண்கள் தெளிந்தது. (I சாமு.14 : 27).**

இஸ்ரவேலர்க்கும், பெலிஸ்தருக்கும் சண்டை நடந்துக் கொண்டிருந்த சமயத்தில் கர்த்தர் இஸ்ரவேலை ரட்சித்தார். அன்றைய தினம் சவுல் ஜனங்களைப் பார்த்து சாயங்காலம் மட்டும் யாரும் போஜனம் பண்ணக்கூடாது. அப்படி மீறினால் அவன் சபிக்கப்பட்டவன் என்று ஆணையிட்டான். அவர்கள் எல்லோரும் சவுலின் ஆணைக்குக் கட்டுப்பட்டு, மாலை வரை யாரும் எதுவும் சாப்பிடவில்லை. தேசத்து ஜனங்கள் எல்லோரும் ஒரு காட்டுக்குள் வந்தார்கள். அப்பொழுது அங்கே வெளியிலே தேனீக்கள் ஒரு தேன்கூடு கட்டியிருந்தது. அந்த தேன் கூட்டிலிருந்து தேன் ஒழுகிக் கொண்டிருந்தது. ஆனால் ஜனங்களில் ஒருவனும் அந்தத் தேனை எடுத்து தங்கள் வாயில் வைக்கவில்லை. சவுல் ராஜாவின் ஆணை / கட்டளையின் நிமித்தம் சபிக்கப்பட்டவர்களாகப் போய் விடுவோமோ என்று பயந்தார்கள்.

ஆனால், சவுல் இந்தக் கட்டளையைக் கூறிய போது, யோனத்தான் அங்கு இல்லை. ஆகவே யோனத்தானுக்கு இந்த விஷயம் தெரியாது. ஜனங்கள் எல்லோரும் பசியினால் அதிகமாக விடாய்த்திருந்தார்கள். ஆனால், யோனத்தான் தன் கையிலிருந்த கோலை நீட்டி, அதின் நுனியினாலே தேன்கூட்டைக் குத்தி, அதை எடுத்து தன் வாயிலே போட்டுக் கொண்டான். அதினால் பசியாயிருந்த யோனத்தான் **கண்கள் தெளிந்தது.**

**தேனின் மருத்துவ குணம் :**

தொண்டைப் புண்களை ஆற்றும். இருமலைக் கட்டுப்படுத்தும், பசியைக் கட்டுப்படுத்தும். பசி அதிகமாய் இருக்கும் போது தேனைச் சாப்பிட்டால் துவண்டு போன கண்கள் தெளிவடையும். உடல் புதிய பெலன் / சக்தி பெறும். புத்துணர்ச்சி கிடைக்கும்.

**4. திராட்சரசமும், ஒலிவ எண்ணெயும் :**

**நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக் கொள் (I தீமோத். 5 : 23)**

அப்போஸ்தலனாகிய பவுல் ஊட்டச்சத்திற்காக (மதுவல்லாத ) திராட்சரசத்தை சேர்த்துக் கொள்ளுமாறு அறிவுரை கூறினார். நிச்சயமாக / உறுதியாக இந்தக் காரியம் மது அருந்தும்படி கூறின ஆலோசனை அல்ல என்பதை தெளிவாக நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**ஒலிவ எண்ணெய்**

**...அநேகம் நோயாளிகளை எண்ணெய் பூசிச் சொஸ்தமாக்கினார்கள் (மாற். 6 : 13). உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள் (யாக். 5 : 14).**

ஊழியம் நடக்கும் எல்லா ஸ்தாபனம் / நிறுவனங்களில் ஜெப எண்ணெய் (Prayer Oil) வைத்திருப்பார்கள். அந்த எண்ணெயை நாம் வீட்டில் கொண்டு வந்து வைத்து, நமக்கோ / அடுத்தவர்களுக்கோ சுகவீனமானால் அந்த இடத்தில் விசுவாசத்தோடு பூசுவோமானால், சுகம் பெறுவோம். மாற்கு 6 : 13-இல் இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் அநேக நோயாளிகளை எண்ணெய் பூசி, சொஸ்தப்படுத்தினார்கள் என்று மாற்கு எழுதுகிறார்.

அதேபோலத்தான் யாக்கோபும் தன்னுடைய நிருபத்திலே எப்படி எழுதுகிறாரென்றால், விசுவாசிகள் நோய்களினின்று

குணமடைவதற்காக பாவங்களை அறிக்கையிடுதல், மூப்பர்கள் விசுவாசத்துடன் கர்த்தருடைய நாமத்தில் எண்ணெய் பூசி ஜெபித்தல் ஆகியவற்றைத் தேவன் ஏற்படுத்தி, வைத்திருக்கிறார். சபையில் யார் வேண்டுமானாலும் சுகம்பெற ஜெபிப்பது நல்லது.

சங். 23-இல் தாவீது பாடுகிறார். என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. அதேபோல் 1 சாமு. 16 : 12,13 வசனங்களிலே சவுலை ராஜ பதவியிலிருந்து எடுத்துவிட்டு, அந்த இடத்திலே தாவீதை அரசனாக்குவதற்கு கர்த்தர் தீர்மானம் பண்ணினார். தாவீதை அரசராக்க வேண்டுமானால் முதலில் அபிஷேகம் பண்ணப்பட வேண்டும். 16 : 1 வசனத்திலே சாமுவேல் தீர்க்கனிடம் நீ உன் கொம்பை தைலத்தால் நிரப்பிக் கொண்டு வா என்றார் தேவன். ஈசாயின் வீட்டிலிருந்த போது, முதல் ஏழு மகன்களையும் தீர்க்கன் முன்பாக ஈசாய் கடந்து போகப் பண்ணினார். எட்டாவது மகனான தாவீது வந்தபோது கர்த்தர் என்ன கூறினார்? இவன்தான் நீ எழுந்து, இவனை அபிஷேகம் பண்ணு என்றார். அப்போது சாமுவேல் தைலக்கொம்பை எடுத்து தாவீதை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம் பண்ணினார்.

<u>திராட்சரசமும், ஒலிவ எண்ணெயும்</u>

லூக். 10 : 30-37 வசனங்களிலே ஒரு சமாரியனைப் பற்றி ஆண்டவர் பேசுகிறார். எருசலேமிலிருந்து எரிகோவுக்கு வந்த ஒரு யூதன், கள்ளர்களால் அடிபட்டு, சாலையில் குற்றுயிராகக் கிடந்தான். அவ்வழியாக வந்த சமாரியன் அவனைக் கண்டு மனதுருகி, கிட்டவந்து, அவன் காயங்களில் எண்ணெயும்; திராட்சரசமும் வார்த்து, காயங்களைக் கட்டி, அவனை பராமரித்தான். திராட்சரசம் ஒரு கிருமி நாசினி. அது மட்டுமல்ல, பாக்டீரியாக்களை அழிக்கும் தன்மைக் கொண்டது. நாட்டு மருத்துவரிடம் சென்றால், எலும்பு முறிதல், நாள்பட்ட புண்களுக்கு எண்ணெய் ஊற்றி, கட்டுப் போடுவார்கள். உடைந்த எலும்புகளுக்கு எண்ணெய் ஊற்றினால் எலும்புகள் ஒன்று கூடுவது / (Joined) / விரைவில் நடக்கும். மேலும் வயிறு சம்பந்தப்பட்ட கோளாறுகள், வலிகள் போன்றவற்றிற்கு திராட்சரசம் மிகப்பெரிய ஔஷதம்.

<u>பிசின் தைலம் மற்றும் கேதுரு மரம் :</u>

யோசேப்பின் சகோதரர்கள் தாங்கள் உணவு சாப்பிட அமர்ந்த போது, தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்தனர். **கீலேயாத்திலிருந்து** வருகிற இஸ்மவேலருடைய கூட்டத்தைக் கண்டார்கள். அவர்கள் எகிப்திற்குக் கொண்டு போகும்படி கந்தவர்க்கங்களையும், **பிசின் தைலத்தையும்,** வெள்ளைப்போளத்தையும், ஒட்டகங்கள் மேல் ஏற்றிக் கொண்டு வந்தார்கள். அந்த **வர்த்தகரான** மீதியானியர் இவர்களை கடந்து போயினர் (ஆதி. 37 : 25).

மீதியானியர்கள் வியாபாரம் செய்பவர்கள். அவர்கள் அடிக்கடி வியாபாரம் விஷயமாக கீலேயாத்திற்குச் சென்று வருவார்கள். வாசனைத் திரவியங்கள், பிசின் தைலம்,வெள்ளைப் போளம் போன்ற உயர்தரமான பொருட்களை வாங்கிக் கொண்டு எகிப்துக்குச் சென்று விற்பார்கள்.

<u>**கந்தவர்க்கங்கள் : (லூக். 24 : 1)**</u>

வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே தாங்கள் (ஸ்திரீகள்) ஆயத்தம் பண்ணின கந்தவர்க்கங்களை எடுத்துக் கொண்டு கல்லறையினிடத்தில் வந்தார்கள். கரிய போளம், வெள்ளைப்போளமானது மரித்த உடல் கெட்டுப் போகாதிருக்க சீலையிலே போட்டு சுற்றிக் கட்டும் மருத்துவ குணம் கொண்டவை.

<u>பிசின் தைலம் :</u> அதிக பணத்திற்கு விற்கப்படும் ஒரு வணிகப் பொருள். தைலம் (Ointment) தயாரிப்பதற்கு மிகவும் பயனுள்ள ஒரு பொருள். இது ஒருவகை மருந்து எண்ணெய் (Medicine Oil) என்றும் கூறலாம்.

**கீலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? இரண வைத்தியனும் அங்கே இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற் போனாள்? (எரேமியா 8 : 22).**

ஆறாத நாள்பட்ட புண்களை ஆற்றக்கூடியது. அதேசமயம் ஆவியானவரின் உதவியும் நம்மிலே இருக்கிறது. வேத வசனங்களைப்

போதிக்கிறவர்களும் உண்டு. இருந்தும் மக்கள் பாவத்தில் இருக்கிறார்களே. இந்தப் பாவமான இரணம் ஆறி, மனமாற்றம் அடைய கண்ணீரோடு ஜெபிப்போமாக!

**கேதுரு மரம் :**

**நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான் (சங். 92 : 12).**

இந்த வசனம் நீதிமானுக்குக் கூறப்பட்ட ஆசீர்வாதங்கள். இந்த ஆசீர்வாதங்களை நாம் அனுபவிக்கிறோமா? நாம் முதிர்வயதிலும் கனி தந்து பசுமையும், செழிப்புமாயிருப்பதே கர்த்தருடைய சித்தம். முதிர் வயதில் சோர்ந்து போவது கர்த்தருடைய சித்தமல்ல.

**வனாந்தரமும், வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தைப் போல செழிக்கும்... லீபனோனின் மகிமையும், கர்மேல் சாரோன் என்பவைகளின் அலங்காரமும் அதற்கு அளிக்கப்படும்... (ஏசா. 35 : 1, 2).**

லீபனோனின் மகிமை என்பது லீபனோன் என்னும் வனத்திலே வளரக்கூடிய விசேஷமான மரம்தான் இந்த கேதுரு மரம். பொதுவாக தாவரங்கள் அதிகவெயில் இருக்கிற வனாந்தரத்தில் வளர முடியாது. அதேபோல கடும் பனி பெய்யும் இடத்தில் வளரமுடியாமல் கருகிப் போய் விடும். ஆனால், இந்த கேதுரு மரங்கள் அப்படியல்ல. என்னவிதமான வெயிலோ, பனியோ ஆனாலும் இவைகளையெல்லாம் மேற்கொண்டு வாழக்கூடியவை. 160 அடி உயரமாகவும், 180 அடி ஆழமாக வேர்களை விடும் விசேஷித்தத் தன்மை கொண்டவை.

கேதுரு மரத்தின் பட்டையை அரைத்து பூசினால் நாள்பட்ட **தோள் வியாதியைக் குணமாக்கும்** தன்மையுடையது.

**6. ஈசோப்பு :**

**நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்.... சங். 51 : 7.**

**ஈசோப்பு என்பது ஒருவகைச் செடி.** இந்தச் செடியை ஈசோப்பின் கொழுந்துகளின் கொத்தை எடுத்து, பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் தோய்த்து வாசல் நிலைக்கால்களிலும், மேல் சட்டத்திலும் பூசும்படி தேவன் கட்டளையிட்டார் (யாத். 12 : 22). இந்த ஈசோப்புச் செடியை ஆசாரியன், அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் தோய்த்து, அதை தீட்டுப்பட்டவர்கள் மீது தெளித்தால், தீட்டானது நிவர்த்தி செய்யப்பட்டதாகக் கருதப்பட்டது. தொழுநோயுள்ளவர் பரிபூரண சுகம் பெற்றதும் அவரைச் சுத்திகரிக்கும் போதும், தீட்டு இருந்த வீடு சரியானதும், அதைச் சுத்திகரிக்கும் போதும் ஈசோப்பை பயன்படுத்தும்படி கர்த்தர் கட்டளையிட்டார். மேலும் தீட்டுப்பட்ட மனிதனும், தீட்டுப்பட்டப் பொருளும் சுத்திகரிக்கப்படுவதற்கு ஈசோப்பு பயன்படுத்தப்பட்டது. மேலும் நியாயப்பிரமாண நூலை திருப்பொழிவு பண்ணவும் ஈசோப்பு பயன்படுத்தப்பட்டது. (எபி. 9 : 19-22)

பாவத்திலிருந்து, தான் சுத்திகரிக்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்த தாவீது, “என்னை ஈசோப்பினால் சுத்திகரியும் என்று வேண்டினார்.” ஆண்டவராகிய கிறிஸ்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த போது ஈசோப்புத் தண்டு பயன்படுத்தப்பட்டது (யோவான் 19 : 29).

**7. பருப்பு மற்றும் மரக்கறிகளும் :**

பத்துநாள் சென்ற பின்பு, ராஜபோஜனத்தைப் புசித்த எல்லா வாலிபரைப் பார்க்கிலும் அவர்கள் (சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ, தானியேல்) முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டார்கள்.

மேற்குறித்த நான்கு பேரும் பாபிலோன் தேசத்திற்கு நேபுகாத்நேச்சாரால் கைதிகளாகக் கொண்டு வரப்பட்டவர்கள். அவர்கள் கல்தேயரின் எழுத்தையும், பாஷையையும் கற்றுத்தேற நல்ல பெலத்தோடு காணப்பட, ராஜாவின் போஜனம் மற்றும் திராட்சரசத்தினால் அவர்களைக் கவனிக்க ராஜாவினால் பிரதானிகளின் தலைவனுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

ஆனால், தானியேல் தங்களை ராஜாவின் போஜனத்தினால் தீட்டுப்படுத்தலாகாது என்று தங்கள் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக் கொண்டார்கள். ஆகவே, தானியேல்

பிரதானிகளின் தலைவனை நோக்கி, பத்து நாள் வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப் பாரும். எங்களுக்குப் புசிக்க பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்தால் போதும்.

இன்றைய காலக்கட்டத்திலே மரக்கறி சாப்பாட்டிற்கு மனிதர்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அசைவ உணவுக்கும், மது பானத்திற்கும்தான் அதிக முக்கியத்தும் தருகின்றனர். அதுமட்டுமல்லாது, Fast Food என்று கூறி, கண் கண்டதையெல்லாம் Fast, Fast ஆக சாப்பிட்டு Fast, Fast ஆக மரணத்தையும், மற்ற நோய்களையும் சந்திக்கின்றனர். சாப்பாட்டில் எந்தவிதக் கட்டுப்பாடுமின்றி சாப்பிடுவதால் உடம்பின் உள்ளே உள்ள அவயவங்களும் பாதிப்புக்குள்ளாகி, நமது ஆயுட்காலத்தை நாமே குறைத்துக் கொள்வதோடு, தேவையில்லாத பணச் செலவும் விரயமாகிறது.

தானியேலும் அவனது நண்பர்களும் மரக்கறி சாப்பாடு சாப்பிட்டு, சரீரமானது களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது. இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும், ஞானத்திலும், அறிவையும், சாமர்த்தியத்தையும் கொடுத்தார். தானியேலைச் சகல தரிசனங்களையும், சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார் (தானி. 1:17).

இன்னும் அதிகமாக வேதாகமத்தைக் கூர்ந்து வாசித்தால் இன்னும் ஏராளமான மருத்துவ குணங்கள் அடங்கியுள்ள செடி, கொடிகளைக் காணலாம். மனிதர்களாகிய நமக்கு எந்த ஒரு பணச் செலவும் இல்லாமல் இலவசமாய் தேவனால் உருவாக்கப்பட்ட மருத்துவ குணம் கொண்ட மரம், செடி மற்றும் கொடி இலைகளை நாமும் பயன்படுத்தி உலகத்தில் உள்ள மக்களுக்கும் பறை சாற்றலாம்.

**தேவனால் படைக்கப்பட்ட கீரைகளின் குணம் :**

அகத்திக்கீரை, மணத்தக்காளி கீரை – வயிறு மற்றும் வாய்ப்புண்ணை ஆற்றும். வல்லாரை, பாலாக்கு – மூளையின் நரம்புகளை திடப்படுத்தும், ஞாபக சக்தியை அதிகரிக்கும். துளசி, கற்பூரவள்ளி – இருமல் மற்றும் சளி தொந்தரவை நீக்கும். முடக்கத்தான் கீரை – வாதத்திற்கு உகந்த மருந்து. கீழா நெல்லி கீரை – காமாலையிலிருந்து நம்மை விடுவிக்கும் பூரண மருந்து. இப்படி கீரைகளிலிருந்து அநேக மருத்துவ குணங்கள் அடங்கியிருக்கிறது.

தேவனின் சாயலில் படைக்கப்பட்ட மக்களாகிய நாம் அதிகமான பணம் செலவு செய்து வைத்தியம் பார்க்க முடியாது என்பதை உணர்ந்த நம் கர்த்தர், எல்லா நோய்க்கும் தேவையான மருந்துகளை இந்த உலகத்தைப் படைக்கும் போதே படைத்தார். எல்லாவற்றையும் நாம் அனுபவித்து நல்ல சரீர, சுகம், பெலன், ஆயுளோடு மனமாற்றமும் அடையப் பெற்று, காணப்படுவோமானால், கர்த்தர் மனமகிழ்ச்சி அடைவார். எல்லா மருந்துக்கும் **விசுவாசமே அடித்தளம்.** அதை நாம் ஒருபோதும் விட்டு விடக்கூடாது. தேவன் நம்மை குணப்படுத்துவாராக. ஆமென்.

**– திருமதி. பேர்ல் குயில்ராஜா**

# எமது தரிசனமும், எமது பணியும்

**எமது தரிசனம் : “இதுவரை மொழி பெயர்க்கப்படாத அனைத்து இந்திய மொழிகளிலும் வேதாகமம் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு சமூகமும் தங்களது தாய்மொழியில் கடவுளுடைய வார்த்தைகளை கிடைக்கும்படி செய்வதே”**

**எமது பணி : கடவுளுடைய வார்த்தையை, இதுவரை வேதாகமம் இல்லாத அனைத்து இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து, அச்சிட்டு, போதிப்பது. மொழிவாரியாக இந்தியாவின் அனைத்துப் பகுதிகளுக்கும் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் / மிஷனெரிகளை அனுப்புதல் மற்றும் ஒவ்வொரு மொழிக்கும் “ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளர் குழுவை” அமைத்து அனுப்புதல்.**

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே சத்திய வார்த்தை பத்திரிகையின் சார்பாக எனது அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**''தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும், நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் எங்களை மகிழ்ச்சியாக்கும்" (சங். 90:15).**

இந்த சங்கீதம் மோசேயினால் எழுதப்பட்ட ஜெப விண்ணப்பம் ஆகும். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்தில் 430 வருஷம் அடிமைகளாயிருந்தார்கள். எகிப்தின் ராஜா அவர்களை கடினமாய் வேலை வாங்கினான். இஸ்ரவேல் ஜனங்களுடைய வாழ்வு அவர்களுக்கு கசப்பாயிருந்தது. பின்பு தேவன் அவர்களை விடுதலையாக்கி, கானான் தேசத்திற்கு புறப்படப் பண்ணினார். அந்த வனாந்தர யாத்திரையில் சில இடங்களில் அவர்களை கர்த்தர் சோதித்துப் பார்த்தார். இஸ்ரவேல் ஜனங்கள் அவிசுவாசிகளாயிருந்தபடியினாலும், கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாததினாலும் சில வாரங்களில் சேரவேண்டிய கானான் தேசத்தை அடைய 40 வருடங்களாய் பிரயாணம் செய்தார்கள். சொந்த தேசமில்லாமல் எகிப்தில் அடிமைகளாகவும் பின்பு வனாந்தரத்தில் பரதேசிகளாய் சுற்றி திரிந்து, நிலைவரமான சுதந்திர தேசத்தை இன்னும் அடையாமல் இருக்கும் சூழ்நிலையில்தான் மோசே இந்த ஜெபத்தைச் செய்தார். மோசே ஜெபித்ததாலே அவர்கள் சிறுமைப்பட்ட நாட்களுக்கும், துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய் தேவன் அவர்களை மகிழ்ச்சியாக்கினார். எப்படியெனில், அவர்கள் கட்டாத வசதியான பெரிய பட்டணங்களையும், அவர்கள் நிரப்பாத சகல வஸ்துக்களாலும் நிரம்பிய வீடுகளையும், அவர்கள் வெட்டாத துரவுகளையும், அவர்கள் நடாத திராட்சத் தோட்டங்களையும், ஒலிவத் தோப்புகளும் உள்ள பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை சுதந்தரிக்கப் பண்ணினார்.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் 400 வருடம் அடிமைகளாயிருந்தது, அவர்கள் செய்த பாவத்தினால் அல்ல; அது கர்த்தருடைய அனாதி தீர்மானம். அதேபோல் சில நாட்களில் முடிய வேண்டிய வனாந்திர யாத்திரை 40 வருடங்களாய் கடந்தது அவர்கள் செய்த பாவத்தின் விளைவாகும்.

விசுவாசிகளான நம்முடைய வாழ்க்கையிலும் சில காலங்கள் சிறுமையும், துன்பமும் வரும். யோசேப்பு, தான் செய்யாத தவறுக்காய் 13 வருஷம் சிறைவாசம் இருந்தார். அதற்குப் பின்பு தேவன் யோசேப்பை வாழ்நாள் முழுவதும் அரண்மனையில் வாழ வைத்தார். யோபுவின் வாழ்க்கையிலும் சிலவருடங்கள் துக்கமும், துயரமும் நிறைந்ததாயிருந்தது. ஆனால் யோபு சோதிக்கப்பட்டு, சுத்த பொன்னாய் விளங்கின பின்பு, தேவன் யோபுவிற்கு இரட்டிப்பாய் திரும்பத் தந்தார். தன் தகப்பனுடைய சொத்தை வழுக்கட்டாயமாய் பெற்றுக்கொண்டு, அவரை விட்டு தூரம் போன இளைய (கெட்ட) குமாரன் தன்னுடைய பாவ பழக்கத்தினால் முழு சொத்தையும் இழந்து, எல்லாராலும் கைவிடப்பட்ட சூழ்நிலையில், பன்றிகளோடு ஒன்றிவாழ வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டான். பின்பு புத்திதெளிந்து, மனம் திரும்பி தன் தகப்பனிடத்தில் திரும்பினான். தகப்பன் தன் மகன் செய்த தவறை மன்னித்து, இழந்துபோன ஸ்தானத்தைக் கொடுத்து அவனை மீண்டும் சேர்த்து கொண்டான்.

அதேப்போல, நம் வாழ்வில் நாம் செய்யாத பாவங்களுக்காய் வருகிற சோதனைகள் நம்முடைய அடுத்த கட்ட ஆசீர்வாதங்களுக்காகவும், நாம் செய்கிற பாவங்களினால் வருகிற தண்டனைகள் மீண்டும் அந்த பாவத்தை நாம் செய்யாமலிருக்கவும், கர்த்தர் தருகிறார். நம்முடைய இருதயங்களைக் கிழித்து, கர்த்தரிடத்தில் திரும்பும்பொழுது அவர் இரக்கமும், மனதுருக்கமாயிருந்து தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்.

**...பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன் (யோவேல் 2:25).**

கடந்த ஆகஸ்ட் மாதம் 15-ஆம் தேதியன்று டிவிஎஸ் நகரிலுள்ள C.S.I. சபையில் மேட்டுப்பாளையத்தில் முன்னேற்ற ஊழியராகப் பணிபுரிந்து வரும் சகோ. சாம் எபிநேசர், மிஷனெரி பிரதிஷ்டை செய்யப்பட்டார்.

இதே மாதம் 16-ஆம் தேதியன்று கோவை IBT மையத்தில் கேரளாவிலிருந்து வந்த திரு. பெனிசன் ஜான்சன் என்பவருக்கு நேர்காணல் நடத்தப்பட்டது.

இதே மாதம் 23-ஆம் தேதியன்று திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆலங்குளம் C.S.I. யோவான் சபையில் ஞாயிறு காலை ஆராதனையில் திரு. வரமணிராஜ் அவர்கள் தேவ செய்தியும், ஊழிய விளக்கத்தை சகோ. செல்வராஜும், ஈரோடு முன்னேற்ற ஊழியர் சகோ.ராஜன் துதி ஆராதனையும் நடத்தினார்கள்.

மேலே கூறப்பட்ட இரு சபைகளின் போதகர்கள் செயலர், பொருளர், சபைமக்கள் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வழிநடத்த ஜெபிப்போம்.

IBT மையத்தில் நடந்து வரும் இறுதி சரிபார்ப்புப் பணிகள் தடையின்றி நடக்கவும், இப்பணிகளில் ஈடுபட்டு வரும் மொழிபெயர்ப்பாளர்களுக்கு கர்த்தர் நல்ல சுகத்தையும், ஆரோக்கியத்தையும் அருளிச் செய்யவும், அவரவர் பணியினை உற்சாகத்துடனும், அர்ப்பணிப்புடனும் செய்ய ஜெபியுங்கள்.

கடந்த 9 மாதங்களும் தீமைகளுக்கு விலக்கிக் காத்து, இந்த மாதத்திலும் நன்மையினால் ஆசீர்வதித்து, கர்த்தருக்குள் நிலைத்து வாழ, வாசகர்களின் குடும்பங்கள் அனைவரையும் ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

கர்த்தரின் பணியில்,
உங்கள் சகோதரன்
**K. ஜெய்சிங்**

# பணித்தளச் செய்திகள்

**மொழிபெயர்ப்பாளர் : சகோ. அசரியா மாதுரி**
**மொழி : கோயா**
**பணித்தளம் : பொடியா (ஒடிஷா)**

கர்த்தருக்குத் துதி உண்டாவதாக!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் தெலுங்கு மொழியில் சிறுவர் வேதாகமம் மறுசரிபார்ப்புப் பணி செய்யப்பட்டன. 10 கதைகள் மறுசரிபார்ப்பு செய்யப்பட்டன. ஜூலை மாதம் 6-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி வரை பாப்பன்பள்ளியில் நடந்த மொழிபெயர்ப்பு சரிபார்ப்புப் பணியில் கலந்து கொண்டேன். திருமதி. கிரிஜா ஐசக் அவர்களால் இப்பணி மேற்கொள்ளப்பட்டது. சபையின் உபயோகத்திற்காக 62 கிறிஸ்துவப் பாடல்களும் சிறுவர் பாடல்களும் கணினியில் கீ-இன் செய்யப்பட்டன.

மிஷனெரிப் பணிக்காக என் பணித்தளத்தின் அருகிலுள்ள மச்சிகுடா, பள்ளகுடா, மட்டம்குடா, சாந்தி நகர், பசகுடா, பந்தலகுடா ஆகிய கிராமங்களுக்குச் சென்று பலரைச் சந்தித்து நற்செய்திப் புத்தகங்கள் மற்றும் கைப்பிரதிகளைக் கொடுத்து நற்செய்தியைக்கூறி, தேவைப்படுகிறவர்களுக்காக ஜெபித்து வந்தேன்.

அற்புத சாட்சி : பொடியாவில் வசித்து வரும் சகோ. சாம்சன் என்பவருக்கு இருதய பாதிப்பு ஏற்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, நிலமை மோசமாக இருப்பதால் விஜயவாடாவிலுள்ள பெரிய மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். அங்கு ICU-வில் அனுமதித்து சிகிச்சைக் கொடுக்க வேண்டுமெனக் கூறியதால், அவர்களுக்கு வசதியில்லாத காரணத்தினால் சிகிச்சையளிக்க முடியாமல், ஜெபத்தின் மூலம் சுகம் கிடைக்க விரும்பியதால் பல விசுவாசிகள் ஒன்றாய் இணைந்து அந்த சகோதரனுக்காக ஜெபித்ததினால், தற்போது குணமடைந்து வருகிறார். கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக. அவர் பூரண சுகமடையவும், என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

<u>மிஷனெரி : சகோ. ரூபன் மிர்கான்</u>

<u>பணித்தளம் : மைதல்ப்பூர் (ஒடிஷா)</u>

இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் வாழ்த்துக்கள்!

மிஷனெரிப் பணிக்காக கடந்த மாதம் சந்திலி, குனிதரா, பரதங்கா, தலிகுடா, ஓல்மா, பிபல்குடா, கியூனி, கிருஷ்ணகுடா ஆகிய கிராமங்களுக்குச் சென்று, நற்செய்திப் புத்தகங்கள் மற்றும் கைப்பிரதிகளை வழங்கி, நற்செய்தியைக் கூறினேன். தேவைப்படுவோருக்காக ஜெபித்தேன். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் கோட்டகாம் என்ற கிராமத்திற்குச் சென்று ஆராதனையில் கலந்துக் கொள்கிறேன். நற்செய்தியை வாஞ்சையுடன் கேட்கும் சகோதரர்கள் ஆனந்தா பாக், சலாம் நாக், சுகன் ஹியால், பிரகாஷ் கர்கரா, சுரேஷ் சத்ரியா, கோவிந்த பாகி, பீதாம்பர் பத்ரா, கிஷோர் காச்சிம் என்பவர்களுக்காகவும், திரு. சகரியா மிர்கான், செபதி மிர்கான், இவர்களின் நல்ல சுகத்திற்காகவும் கோட்டகம் சபை மக்கள் ஆவிக்குள் வளரவும், என் மிஷனெரிப் பணிக்காகவும், என் சகோதரிகள், சகோதரனுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

---

<u>முன்னேற்றப் பணியாளர் : சகோ. பால் ஜெயசுதன்</u>

<u>பணித்தளம் : திருச்சி (தமிழ்நாடு)</u>

கர்த்தருடைய கிருபையினால் கடந்த மாதம் முழுவதுமாக திருச்சி மாவட்டத்தில் முன்னேற்றப் பணியைச் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். கடந்த மாதம் புதிய சத்தியவார்த்தை சந்தாதாரர்களை சந்தித்து காணிக்கைப் பெற்றேன். இன்னும் ஒரு சிலருக்கு ஊழியத்தை அறிமுகம் செய்தேன். கடந்த மாதம் C.S.I. திருமண்டல பொருளாளரைச் சந்தித்து பேராயரை சந்திக்கக் கேட்டேன். அடுத்த மாதம் நேரில் சந்தித்து IBT முன்னேற்றக் கூட்டம் நடத்த அனுமதி கேட்கலாம் எனக் கூறினார்கள். அதே போல T.E.L.C. பேராயரை மீண்டும் இந்த மாதம் சந்தித்து அனுமதி கடிதம் கேட்க உள்ளேன். கடந்த மாதம் படுகா ஆடியோ புதிய ஏற்பாடு நான்கு வாங்க இரண்டு தாங்குநர்கள் காணிக்கை கொடுத்தனர். அதேபோல, ஒடிசா சந்தோஷ்பூர் சபைக்கு மூன்று பேர் காணிக்கை கொடுத்தனர். அதன் மேற்கூரை பணிகள் ஆரம்பிக்கப்பட்டதா எனக் கேட்டனர். இந்தப் பணிகள் சீக்கிரத்தில் ஆரம்பிக்கப்படும் எனக் கூறினேன். இன்னும் கடந்த மாதம் ஜெபித்த தாங்குநர்களுக்கு கர்த்தர் பதிலைக் கொடுத்தார். இந்த மாதமும் ஒரு சில தாங்குநர்கள் வெயில் தாக்கம் காரணமாக சுகவீனமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஊக்கமாக ஜெபித்தேன். புதிய தாங்குநர்களையும் சந்திக்க முயற்சி எடுத்து வருகிறேன். முன்னேற்றக் கூட்டம் நடத்த முயற்சி செய்து வருகிறேன். 200 மொழித் திட்டம் குறித்து ஒவ்வொரு தாங்குநர்களுக்கும் சொல்லி வருகிறேன். எனக்காகவும், குடும்பத்திற்காகவும் ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

---

<u>மிஷனெரி : சகோ. பட்டிராஜ்</u>

<u>பணித்தளம் : சலாம்பூர் (உத்திரப் பிரதேசம்)</u>

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் மிஷனெரிப் பணிக்காக சக்கரா, பந்தாரி, பரஷியா முஜாலா, மணிஹாரி, தெஹாரி, புராணி, காம்பர், பரோலி, முசாலா, துபாலி, ஜெய்ராம், கௌடியா, மாலிப்பூர், பஹோரா, மகஹாரா ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்திப் புத்தகங்கள், கைப்பிரதிகளைக் கொடுத்து, நற்செய்தியைக் கூறி வந்தேன். உபவாச ஜெபக்கூட்டங்கள், திருமதி. கமலாவதி, ரீனாயாதேவ், சந்தா, ரேகா ஆகியோரின் வீடுகளில் நடத்தப்பட்டன. ஜெபத்தின் மூலமாக சுகம் பெற்றவர்கள் : பூஜா ராணிகுமாரி, அனுக்கா குமாரி, ராஜ்பான்ஸ், ராம்தர், கலிந்தி, ரிங்கு, பஜ்வான் மற்றும் அனுபம் ஆகியோர் சகோதரிகள் பிரேம்ஷியா மற்றும் முன்னி ஆகியோரை புதிதாக சந்தித்து, கிறிஸ்துவைப் பற்றிக் கூறி, அவர்களுக்காக ஜெபித்தேன். மிஷனெரிப் பணிகளிலுள்ள தடைகள் மாறவும், என் மிஷனெரிப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

<u>மொழிபெயர்ப்பாளர் : சகோதரி. லதா ராமச்சந்திரப்பா</u>
<u>மொழி : போவி</u>
<u>பணித்தளம் : ஹவேரி (கர்நாடகா)</u>

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாடு பாகத்தில் யாத்திராகமம் புத்தகம் அதிகாரம் 26 முதல் அதி. 40 வரையிலும், லேவியராகமம் அதி. 1 முதல் அதி. 27 வரையிலும், எண்ணாகமம் அதி. 1 முதல் அதி. 36 வரையிலும், உபாகமம் அதி. 1 முதல் அதி. 34 வரையிலும், யோசுவா அதி. 1 முதல் அதி. 3 வரையிலும் மொழி சரிபார்ப்புச் செய்யப்பட்டது.

போவி மொழியிலுள்ள புதிய ஏற்பாடு புத்தகங்கள் விநியோகம் செய்யப்பட்டன. இதுவரை 768 புத்தகங்கள் இம்மொழி பேசும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. புத்தகங்களை வாங்கியவர்கள் அனுதினமும் வாசித்து, தியானித்து கர்த்தருக்குள் வளரவும், என் பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

--------------------

## IBT ஊழியத்தில் தற்போது பணிபுரிந்து வரும் முன்னேற்றப் பணியாளர்களின் விபரங்கள்



பெயர் : **திரு. இராமலிங்கம்**
பணித்தளம் : நீலகிரி (தமிழ்நாடு)



பெயர் : **திருமதி. இந்திரா**
பணித்தளம் : நீலகிரி (தமிழ்நாடு)



பெயர் : **திரு. மனோனிட்டா சிங்**
பணித்தளம் : விசாகப்பட்டினம் (ஆந்திரா)



பெயர் : **திரு. G.N. சுந்தர்**
பணித்தளம் : தஞ்சாவூர் & புதுக்கோட்டை



பெயர் : **திரு. ரெஜீ ஜெல்லிபாரா**
பணித்தளம் : திருச்சூர் (கேரளா)



பெயர் : **திரு. பால் ஜெயசுதன்**
பணித்தளம் : திருச்சி (தமிழ்நாடு)



பெயர் : **திரு. K. கிதியோன்**
பணித்தளம் : கோவை (தமிழ்நாடு)



பெயர் : **திரு. S. ராஜன்**
பணித்தளம் : ஈரோடு (தமிழ்நாடு)



பெயர் : **திரு. K. சுந்தர்**
பணித்தளம் : சென்னை (தமிழ்நாடு)



பெயர் : **திரு. செல்வராஜ்**
பணித்தளம் : திருநெல்வேலி & மதுரை (தமிழ்நாடு)



பெயர் : **திரு. சாம் எபிநேசர்**
பணித்தளம் : மேட்டுப்பாளையம் & கோவை (தமிழ்நாடு)



பெயர் : **திரு. பெனியேல் ராஜா**
பணித்தளம் : பவானி & கரூர் (தமிழ்நாடு)

## ஜெபத்தின் மூலமாக சுகம் பெற்றவரின் சாட்சி!

என் பெயர் கிறிஸ்டோபர். நான் திருப்பூரில் IBT ஜெபக் குழுவோடு இணைந்து ஊழியங்களுக்காக ஜெபித்து வருகிறேன். இந்த செப்டம்பர் மாதத்தில் சிறுநீரகத்தில் கல் அடைப்பினால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தேன். IBT ஜெபக்குழுவாக மருத்துவமனைக்கு வந்து எனக்காக ஜெபித்தார்கள். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அடுத்த நாள் காலையில் சிறுநீரகக் கல் வெளியேற உதவி செய்தார். ஜெபத்தை கேட்டு சுகம் கொடுத்த கர்த்தருக்கு ஸ்த்தோத்திரம்.

– **திரு. ராஜகுமார்,** திருப்பூர் பிரதிநிதி

## ஒலிப்பதிவு வேதாகமத்தைப் பற்றிய ஒரு சாட்சி!

ஜோஸ்வா என்பவரின் தாயார் புஸ்பா குளோரி சமீபத்தில் காரமடையில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். அந்த ஜெபக் கூட்டத்தில் அவர்கள் மகன் தன் தாயாரைப்பற்றிக் கூறியது: என் தாயார் எப்போதும் இருளா-வெள்ளியங்காடு ஆடியோ வேதாகமத்தைக் கேட்டுக் கொண்டே இருப்பார்களென்று. ஆகவே, அவர்கள் நித்திய ராஜ்யத்தில் பங்கு பெற்றுள்ளார்கள் என்று விசுவாசிக்கிறோம்.

– **திரு. சாமுவேல்,** இருளா-வெள்ளியங்காடு மொழிபெயர்ப்பாளர்

## ஆலயத்தில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள்



1. ஆலயங்களில் உள்ளே நுழையும் முன் செருப்பை வெளியே கழட்ட வேண்டும்.
2. ஆலயத்திற்குள் நுழைந்ததும் மொபைல் போனை சுவிட்ச் ஆஃப் செய்ய வேண்டும். செல்போனில் பேசக்கூடாது.
3. நாகரீகமான, கண்ணியமான ஆடைகள் அணிந்து ஆலயம் வர வேண்டும். (T-Shirt, லுங்கி அணியக்கூடாது).
4. ஒழுக்கத்தைக் கெடுக்கும் ஆடைகள் அணிந்து ஆலயம் வரவே கூடாது.
5. பெண்கள் ஆராதனை முடியும் வரை தலைக்கு முக்காடிட வேண்டும்.
6. ஆண்களும், பெண்களும் ஆராதனை முடியும் வரை பக்கத்தில் இருப்பவர்களிடம் பேசவே கூடாது.
7. அருகில் உள்ளவர்களின் பின்பக்கம் கை போட்டு அமரக்கூடாது.
8. திவ்ய நற்கருணையை பக்தியோடு முழங்காலில் நின்று வாங்க வேண்டும்.
9. நற்கருணை வாங்கிய பின்பு யார் பேசினாலும் அதைக் கவனிக்காமல் நாவில் வந்து, இதயத்தில் நுழைந்து, ஆன்மாவில் தங்கும் இயேசுவோடு மட்டும்தான் ஒரு 10 நிமிடமாவது பேசவேண்டும். உறவாடவேண்டும்.
10. பிரசங்கம் நடக்கும்போது இளைஞர்கள் வெளிநடப்புச் செய்யக்கூடாது.
11. திருப்பந்தி என்ற நற்கருணையில் பங்கேற்கும் மக்கள் பக்தியுடன் பங்கேற்றாலே தீமைகள் குறைந்துவிடும்.
12. முகதாட்சண்யம் பார்க்கவே கூடாது. தப்பு என்று தெரிந்தும் அது நடக்க அனுமதிக்கக்கூடாது. முடிந்தவரையில் முறையாக மென்மையாகப் பேசி அதைத் தடுக்க வேண்டும்.
13. தேவைகள் குறைய குறைய ஜெபங்கள் அதிகமாக வேண்டும்.
14. குடும்ப ஜெபம் (வீட்டில் எத்தனை பேர் இருக்கிறீர்களோ அவர்கள் எல்லாரும்) ஜெபித்தே ஆகவேண்டும்.
15. ஜெபம் செய்யும் போது கண்கள் மூடி இருக்கவேண்டும்.

நன்றி – "மேய்ப்பனின் குரல்" ஆகஸ்ட் 2026 இதழிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டது.

# கோத்தகிரி முன்னேற்றப் பணியாளர் சகோ. ராமலிங்கம்

## அவர்களின் ஜூலை மாத அறிக்கையின் ஒரு சிலவற்றை கீழே கொடுக்கிறோம்

1. அட்டடி என்ற இடத்தில் போதகர் நெல்சன் என்பவர் 30 வருடத்திற்குமேல் ஒரே இடத்தில் ஊழியம் செய்து, சபை நடத்தி வருகிறார். இப்பொழுது சென்னைக்கு சென்று, அங்கு சபை ஊழியத்தை நடத்தும்படி செல்வதாக சொன்னார். அவர் முதலில் ரூ. 100 கொடுத்து வந்தவர், பிறகு 200, 250, 300 என்று அதிகப்படுத்தினார். இந்த 300 ரூபாயைக் கொடுக்கும்போது, நாங்கள் ஜெபித்து விட்டு, தயங்காமல் பாப்பன்பள்ளி ஊழியத்தைப்பற்றி அவரிடம் சொல்லி, ரூ. 500/- வீதம் கொடுத்து தாங்கலாமே என்றேன். உடனே ஜூன் மாதத்தில் ரூ. 500/- தந்தார். இந்த ஜூலை மாதத்தில் அவர் முதல் வாரத்தில் சென்னைக்குப் புறப்பட்டு போகிற நேரத்தில் எனக்கு போன் செய்து, நாங்கள் சென்னைக்குப் புறப்பட்டுச் செல்கிறோம். போன் மூலமாக எங்களுக்குச் ஜெபியுங்கள் என்றார். நான் ஜெபித்தபின் அவர், நாங்கள் சென்னைக்குச் சென்றாலும், IBT ஊழியத்தை மறக்காமல் ஒவ்வொரு மாதமும் பணம் அனுப்பி விடுகிறோம் என்று சொல்லி, அதேபடி இம்மாதம் அனுப்பியுள்ளார்கள். இவர்கள் மட்டுமல்ல: நீலகிரியில் நான் செய்த ஊழியத்தின் மூலம் இடம் மாறிச்சென்றவர்கள், ஜெபநாதன், சோபியா, கார்த்திகா ராஜ்குமார், சாமுவேல் தினகரன், பால்சந்திரன், ஜான்நெல்சன், பத்மா அர்னால்ட், எஸ்தர் வில்லியம் ஆகிய அனைவரும் சென்னை, கோவை பகுதிகளிலிருந்து ஒவ்வொரு மாதம் 1-ஆம் தேதியன்றே ஞாபகத்துடன் IBT காணிக்கையை அனுப்பி விடுகிறார்கள்.
2. பொதுவாக பள்ளிக்கூடம் நடத்தும் ஆசிரியர்களை நான் விடுவதில்லை. நீங்கள் பள்ளி ஆசிரியராக இருக்கும்போது, பள்ளிப் பிள்ளைகளின் அருமை உங்களுக்குதான் நன்கு தெரியும் என்று சொல்லி, கோயா மொழி, பிள்ளைகளைப் பற்றி உடனே சொல்லி விடுவேன். இப்படிப்பட்ட நிலையில் இன்றைய மாதம் வரை 34 பேர்கள் ரூ. 500/- கொடுத்து சிறுவர் இல்லப் பிள்ளைகளைத் தாங்கி வருகிறார்கள். இதில் இரண்டு ஆசிரியர்கள் ரூ. 1000/-மாக உயர்த்தி தருகிறார்கள்.
3. ஒரு பெந்தெகொஸ்தே சபை போதகர், தன் சபைக்கு காணிக்கை வரவேண்டும் என்று எண்ணாமல், அவர்கள் சபை பேரில் ரூ. 500/- மற்றும் அந்த போதகர் மூலம் ரூ. 500/-, அவர் பிள்ளைகள் பேரில் ரூ. 1,000/- கொடுப்பதோடு, தன் சபையில் IBT ஊழியத்தைப் பற்றி எடுத்துக் கூறியதால் அச்சபையைச் சேர்ந்த ஒரு குடும்பத்தில் கணவன் பெயரில் ரூ. 500/-, மனைவி பெயரில் ரூ. 500/- தரும்படி செய்திருக்கிறார். இன்று 3 குடும்பங்கள் மொத்தமாகச் சேர்த்து 11 குடும்பங்கள் ரூ. 500/- வீதம் காணிக்கைக் கொடுக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

– J. ராமலிங்கம்

## இதற்காக ஜெபியுங்கள்!

### இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் 2028 லோகோஸ் முகாமில் வெளியிடப்படவுள்ள வேதாகம புத்தகங்கள்

| மொழி | மொழிபெயர்ப்பாளர் | மாநிலம் |
|---|---|---|
| பரிசுத்த வேதாகமம் | | |
| 1. மிர்கான் | கேசப் மிர்கான் | ஒடிசா |
| 2. கலகாண்டியா | பித்தாம்பர் மஹானங் | ஒடிசா |
| 3. தெஷியா | கிறிஸ்துதான் | ஒடிசா |
| 4. போஜ்புரி | சுதிர்குமார் | உத்திரப்பிரதேசம் |
| புதிய ஏற்பாடு, சங்கீதம் & நீதிமொழிகள் | | |
| 1. டிங்கால் | அல்தாஃப் ஹுசைன் | ராஜஸ்தான் |
| 2. குடுக் | ஷோபத்ராம் | சத்தீஸ்கர் |
| 3. பாகேலி | ஸ்ரீனிவாஸ் சாக்கட் | மத்தியப்பிரதேசம் |
| 4. பண்டேலி | தேவேஷ் குமாரி | மத்தியப்பிரதேசம் |
| 5. சோரா | கடாமண்டல் | ஒடிசா |
| 6. குவி | சாமுவேல் சந்தா | ஒடிசா |
| 7. சித்தி | பிரகாஷ் சித்தி | கர்நாடகா |

## Google Meet Prayer

IBT ஊழியங்களுக்காக (Google Meet) கூகுள் மீட் மூலமாக ஜெபிக்க விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட மொபைல் எண்ணிற்கு தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

**திரு. ராஜகுமார் – 80502 64321**
**பிரதி சனிக்கிழமை : காலை 5.00 – 6.00 மணி**

**திரு. சகாயசுவீடன் – 74899 66860**
**பிரதி ஞாயிற்றுக்கிழமை : இரவு 9.00 – 10.00 மணி**

**திரு. பால்ஜெயசுதன் – 097904 84572**
**பிரதி புதன்கிழமை : இரவு 9.00 – 10.00 மணி**

# தரிசனம் - 2028

இந்திய தேசத்தில் வாழும் அனைத்து மொழிபேசும் மக்களுக்கு அவரவர் தாய் மொழியில் வேதாகமத்தைக் கொடுக்க வேண்டும் என்கிற தரிசனத்தில் வருகிற 2028-ஆம் ஆண்டு IBT ஊழியத்தின் 50-ஆம் ஆண்டு கர்த்தர் கொடுத்த தரிசனத்தின்படி IBT-ன் லோகோஸ் முகாமில் மிர்கான், தெஷியா, கலகாண்டியா, மற்றும் போஜ்புரி ஆகிய நான்கு மொழிகளில் வேதாகமமும், டிங்கால், குடுக், பாகேலி, பண்டேலி, சோரா, குவி மற்றும் சித்தி ஆகிய ஏழு மொழிகளில் புதிய ஏற்பாட்டுடன் கூடிய சங்கீதம், நீதிமொழிகள் புத்தகங்களும் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்படுவதற்கான கடைசிக்கட்டப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ஒரு வேதாகமம் அச்சிடுவதற்கான தொகை ரூ. 1,070/- (ஒரு மொழியில் 1000 பிரதிகள் அச்சிட ஆகும் செலவு ரூ. 10,70,000/-) மற்றும் ஒரு புதிய ஏற்பாட்டுடன் கூடிய சங்கீதம் நீதிமொழிகள் அச்சிடுவதற்கான தொகை ரூ. 260/- (ஒரு மொழியில் 1000 பிரதிகள் அச்சிட ஆகும் செலவு ரூ. 2,60,000/-). மேற்கூறிய மொழிகளைப் பேசும் மக்களும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிந்துகொள்ள உங்களது ஜெபத்தினாலும் பொருளுதவியினாலும் இந்தத் தேவைகளைச் சந்திக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

வேதாகமப் பணியை (OT & NT) செய்து வரும் மிர்கான் மொழிபெயர்ப்பாளர் சகோ. கேசப்மிர்கான் சுகவீனம் மாறவும், கலகாண்டியா மொழிபெயர்ப்பாளர் சகோ. பீதாம்பரின் மகன் சுகமடையவும், குடுக் மொழிபெயர்ப்பாளர் சகோ. சோபத்ராம் சுகவீனம் மாறவும், இதினிமித்தம் பின்தங்கியுள்ள பணிகள் ஈடுசெய்யப்படவும் ஜெபியுங்கள்.

# உலகச் செய்திகள்

1. ஆகஸ்ட் மாதத்தில் நேபாளத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டதில் 1344 உடல்கள் மீட்கப்பட்ட நிலையில், சுமார் 5000 பேரின் நிலை என்ன என்பது இன்னும் தெரியவில்லை. இதில் 275 இந்தியர்கள் உட்பட சுமார் 6000 பேரும் அடங்குவர்.

2. பீகாரில் கங்கை உள்ளிட்ட நதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, தலைநகர் பாட்னா உட்பட 11 மாவட்டங்கள் தத்தளிக்கின்றன. மழை வெள்ளத்தில் 22 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

3. 2367 கிலோ செயற்கைக் கோளுடன் ஜி.எஸ்.எல்.வி. ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது. இயற்கை பேரிடர்களை கண்காணிக்க துல்லியமாக படம் பிடித்து உதவும் இந்த செயற்கைக்கோளை 36 ஆயிரம் கிலோ மீட்டர் உயரத்தில் நிலைநிறுத்தி இஸ்ரோ விஞ்ஞானிகள் சாதனை படைத்தனர்.

# வாசகர்களுக்கு ஓர் அவசர செய்தி!

- ★ நமது சத்தியவார்த்தை பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது சத்திய வார்த்தை பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், மின்னஞ்சல் (E-mail) முகவரிகளையும், வாட்ஸ்-அப் எண்களையும் கடிதம் மூலமோ, மின்னஞ்சல் (E-mail) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்-அப் மூலமோ, குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள். தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள்!
- ★ சத்திய வார்த்தை பத்திரிகையை மின்னஞ்சல் மூலமாக பெற விரும்புவோர் wordpublisherstrust@gmail.com என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.
- ★ சத்திய வார்த்தை வாசகர்கள் WhatsApp மூலம் சத்தியவார்த்தை பத்திரிகையை (தமிழ், ஆங்கிலம்) பெற விரும்புகிறவர்கள் IBT WhatsApp No. 90470 57414 என்ற எண்ணிற்கு தெரிவிக்கவும்.
- ★ IBT Website-லும் சத்திய வார்த்தை தமிழ் மற்றும் ஆங்கில பத்திரிகையை www.ibtword.com பதிவிறக்கம் செய்து, வாசித்துப் பயன்பெற்றுக் கொள்ளலாம்.

# தேவை

சென்னையில் பணிபுரியும் முன்னேற்றப் பணியாளருக்கும், புதிதாக IBT ஊழியத்தில் பவானி, கரூர் பகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள முன்னேற்றப் பணியாளருக்கும், 2 இருசக்கர வாகனங்கள் தேவைப்படுகின்றன. இதற்கு ஆகும் செலவு ரூ. 1,95,000/-. இதற்கு தாங்குநர்கள் கிடைக்க ஜெபியுங்கள்.

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

**1. STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

**2. INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

**Merchant Name : Indian Bible Translators**
**UPI ID : INDIANBIBLE@SBI**

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

# கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | சோர்வும் தீர்வும் | ரூ. 100/- |
| 4. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 5. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 6. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 7. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 8. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 9. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 10. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 11. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 12. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 13. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 14. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 15. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 16. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – அலைபேசி : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

# IBT பிரதிநிதிகள்

IBT ஊழியத்தில் தன்னார்வ ஊழியர்களாய் (Representatives) இணைய விருப்பமுள்ள, ஊழிய பாரமுள்ளவர்கள் நீங்கள் இருக்கும் பகுதியில் IBT ஊழியத்தை அறிமுகப்படுத்தலாம்; சிறுகுழுவாக ஜெபிக்கலாம். விபரங்களை அறிய விரும்புவோர் IBT அலுவலகத்தின் கீழ்க்கண்ட அலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்கிறோம். **அலைபேசி எண். 90470 57414**

# துதியுங்கள்! ஜெபியுங்கள்!!

1. டிங்கால் மொழிபெயர்ப்பாளர் சகோ. அல்டாஃப் ஹுசைன் கடந்த ஆகஸ்ட் மாதம் கோவை IBT மையத்திற்கு வந்து ஒரு வாரத்தில் தன் மீதமுள்ள புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் பணிகளை நிறைவு செய்ததற்காக கர்த்தரைத் துதியுங்கள். இதன்பின் Group Checking முடித்து, Type Setting பணிக்கு அனுப்பப்பட ஜெபியுங்கள்.
2. திட்டமிட்டபடியாக புதிய ஏற்பாடு சங்கீதம், நீதிமொழிகள் மொழிபெயர்ப்பாளர்கள் ஆகஸ்ட் மாதத்தில் கோவை IBT மையத்திற்கு வந்து, பணிகளை முடித்து தங்கள் பணித்தளங்களில் Group Checking பணியைச் செய்வதற்காகவும், வேதாமகப் பணிகளை (OT & NT) முடிக்கும்படியாய் கடந்த செப்டம்பர் மாதம் முதல் கோவை IBT மையத்தில் தங்கி தங்கள் பணிகளைச் செய்து வருவதற்காக கர்த்தரைத் துதியுங்கள்; போஜ்புரி மொழியில் Group Checking ஆரம்பிக்கப்படவும், மீதமுள்ள மிர்கான், கலகாண்டியா மற்றும் தெஷியா மொழிகளில் Group Checking ஆரம்பிக்கப்படவும் ஜெபியுங்கள்.
3. கடபா மொழியிலுள்ள புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள், Type Setting பணி ஆரம்பிப்பதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இதுமுடிக்கப்பட்டு, சரிபார்ப்பும் துரிதமாய் முடிக்கப்பட்டு, அச்சடிக்கும் பணி இவ்வருடத்தில் முடிவடைய ஜெபியுங்கள்.
4. கடந்த செப்டம்பர் மாதம் 19-ஆம் தேதியன்று கோவை IBT மையத்தில் நடைபெற்ற IBT-இன் நிர்வாகக் குழு கூட்டம் மற்றும் பொதுக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தடையின்றி நிறைவேற்றப் படவும், இது IBT ஊழியத்தின் வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கவும், கடந்த ஆகஸ்ட் மாதத்தில் IBT மையத்தில் நேர்காணலில் கலந்து கொண்ட மூவரும் கர்த்தருக்கு சித்தமானால் தேர்வு செய்யப்படவும் ஜெபியுங்கள்.

## SEND ALL YOUR CONTRIBUTIONS


**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

Phone : 0422 - 3527370

WhatsApp & Mobile : 90470 57414

E-mail : indianbibletranslators@gmail.com

**Web : www.ibtword.com**


## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். வருட சந்தா ரூபாய். 100/-

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of
**Mr. K. JAISINGH**
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

Printed by
**Mr. C.K. VENKATESH**
Chandra Prabha Press
113-118, V.H. Road, CBE-1.




## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவைப் புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/–ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கி மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ SCAN** செய்து, கைப்பேசி மூலமாகவும் உங்கள் காணிக்கைகளை எங்களுக்கு அனுப்பலாம். அனுப்பப்பட்ட விவரத்தை உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 1630413107 |
| Name | : | Word Publishers Trust |
| Branch | : | Kalapatti |
| IFS Code | : | CBIN0282057 |

**SCAN & PAY**

Address :

**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd October 2026
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**